## காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

### காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திலிருந்து ஊடக அறிக்கை

12 மார்ச் 2018, கொழும்பு

அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் அரசியலமைப்பு பேரவை, பாராளுமன்றத்தின் பலவகையான அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் பரிந்துரையின் நிமித்தம் 2018 பெப்ரவரி 28 அன்று ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நியமனத்தைத் தொடர்ந்து, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP.) உத்தியோகபூர்வமாகக் கடமைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் பல தசாப்தங்களாக ஏற்பட்ட மோதல்களின்போது காணாமல் போன அல்லது காணாமல்போகச் செய்யப்பட்ட அன்புக்குரியவர்கள் குறித்து, நாட்டின் சகல பாகங்களிலும் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வேதனைகளைக் கவனத்திற்கெடுப்பதே, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரதான நோக்கமாகும்.

சகல பாதிக்கப்பட்டவர்களுக்கும் சேவையாற்றுவதற்காக கா.ஆ.அ. தாபிக்கப்பட்டுள்ளதனால், இனம், மதம் மற்றும் பிராந்தியம் ஆகியவற்றுக்கு அப்பால், காணாமல்போன மற்றும் காணாமல்போகச் செய்யப்பட்ட ஆட்களின் அநேக விடயங்களை, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம். கவனத்திற்கெடுக்கும். காலம் கடந்த போதிலும், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் பல ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்ட போதிலும், தமது அன்புக்குரியவர்களின் நிலை குறித்து அறியாமல், இக் குடும்பங்களின் பெரும்பாலானவை வேதனைப்படுவதுடன், உண்மைக்கான தொடர்ச்சியான தேடலொன்றிலும் ஈடுபட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற மோதல்களின்போது பலதரப்பட்ட ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமல்போனதாக அடையாளம் காணப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை ஆகியவற்றின் பெருமளவு உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள், போராளிகள் ஆகியோர் பற்றிய முறைப்பாடுகளை காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்திற்கு அமைய : (i) காணாமற்போன மற்றும் காணாமற்போகச் செய்யப்பட்ட ஆட்களைத் தேடுதல், நடவடிக்கை இடம்பெற்ற சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்தல் (ii) காணாமற் போனவர்களினதும்/காணாமற்போகச் செய்யப்பட்டவர்களினதும் அவர்களது அடுத்த உறவினர்களினதும் உரிமைகளையும், அக்கறைகளையும் பாதுகாத்தல் (iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தின் வழிவகைகளை அடையாளங் காணுதல் மற்றும் (iv) அத்தகைய சம்பவங்கள் மீள் நிகழாமையைத் தடுக்கும் முகமாக அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளைச் செய்தல் என்பன காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளாகும்.

காணாமற்போகச் செய்யப்பட்ட குடும்பங்களின் சார்பில் உறுப்பினர் ஒருவர் மற்றும் ஓர் இளைப்பாறிய இராணுவ சட்ட ஆலோசகர் உட்பட செயல் ஆர்வலராகவும், அரசாங்கச் சேவையாளராகவும் அத்துடன் தொழில் நிபுணத்துவம், மனித உரிமைகள் துறையில்

அனுபவத்தைக் கொண்ட தனிப்பட்டவர்கள் ஆகியோரைக் கொண்ட சமூகத்தின் பிரதிபலிப்புக்ளை காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏழு உறுப்பினர்களாக நாம் பிரதிநிதிப்படுத்துகின்றோம். இலங்கையின் மோதல்களில் பாதிக்கப்பட்ட சகலரின் சேமநலனுக்கு நாம் ஆழமான அர்ப்பணிப்பினைக் கொண்டிருப்பதுடன், பாராளுமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் குறித்து நாம் உணர்வுப்பூர்வமாகவும் உள்ளோம். எமது பணிகளைப் பாரபட்சமின்றியும், நல்நோக்கத்துடனும் நிறைவேற்றுவதற்கான அவசியத்தையிட்டு நாம் கவனத்துடன் உள்ளோம். மேலும், காணாமற்போனவர்களுக்கும், காணாமற்போகச் செய்யப்பட்டவர்களுக்கும் அத்துடன் அவர்களின் குடும்பங்களுக்கும் எமது கடப்பாடுகள் இந்த முயற்சியில் முக்கியமானதாகும்.

பிரச்சனையின் பரிமாணத்தையும் அத்துடன் காணாமல்போனவர்களுக்கும், மற்றும் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களுக்குமான தேடலுக்கு அவசியமான பல்வேறு பணிகள் சம்பந்தமான சிக்கலானதன்மையையும், சட்டமாக்கப்பட்டவாறு, நிரந்தரமான அலுவலகமொன்றாக காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம். செயற்படும். அதன் வடிவமைப்பில், விசாரணை மற்றும் தேடுதல் ஆகியவற்றுடன் பணிக்கப்பட்டுள்ள நிரந்தரமான நிறுவனமொன்றாக விளங்குவதற்கு, ஒரேகாலத்தில் தற்காலிகமானதும் அத்துடன் ஆவணப்படுத்துவதற்கும், பரிந்துரைப்பதற்கும் பெரிதுமே தொண்டாற்றுகின்றதுமான காணாமல் போகச்செய்தல்கள் குறித்து கையாள்வதற்கான முன்னைய அரசாங்கப் பொறிமுறைகளிலிருந்து காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் வித்தியாசமானதாகும். பெருமளவு பாதிக்கப்பட்ட ஆட்களுக்கும், சமூகங்களுக்கும் நிவாரணத்தை வழங்குகின்ற நம்பகமானதும், செயற்றிறனானதும் அத்துடன் பலமானதுமான நிறுவனமொன்றைத் தாபிப்பதே தற்போதைய உறுப்பினர்களின் பணியாக விளங்கும்.

அவ்வாறு செய்கையில், காணாமல்போகச் செய்தல்களைப் பரிசீலிப்பதற்கும் அத்துடன் விசாரிப்பதற்கும் முன்னைய ஆணைக்குழுக்களின் முயற்சிகள் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நடைமுறைகளினதும், கட்டமைப்புக்களினதும் வடிவமைப்பு அறிவிக்கும் என்பதை கா.ஆ.அ. உறுதிப்படுத்தும். மேலதிகமாக, நல்லிணக்கப் பொறிமுறைகள் மீதான கலந்துரையாடல் செயற்பணிக்குச் செய்யப்பட்ட முக்கியமான பரிந்துரைகளைக் கவனமாக கரிசனைக்கெடுக்கின்ற அதேவேளை பாதிக்கப்பட்டவர்களுடனும், வேறு பங்காளர்களுடனும் பேசி கலந்துரையாடலூடான அணுகுமுறையொன்றை கா.ஆ.அ. பயன்படுத்தும். கா.ஆ.அ.இன் செயற்படும் தன்மைக்கான வழிகாட்டும் தத்துவமொன்றாக பாதிக்கப்பட்டவர் நிலையிலான தன்மை விளங்கும். எனினும், நான்கு நிறுவனங்களில் கா.ஆ.அ. ஒன்று என்பதையும், எமது தேசத்தினுள் நல்லிணக்கத்தையும், நிரந்தரமான சமாதானத்தையும் உறுதிப்படுத்துவதற்கு, அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்ட பல நடவடிக்கைகளில் இது ஒன்று என்பதையும் அங்கீகரிப்பது முக்கியமானதாகும்.

அத்தகையதொரு பொறிமுறையைத் தாபிப்பது காலங்கடந்ததாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். காணாமற்போகச் செய்யப்பட்டோரினதும் மற்றும் காணாமல் போனவர்களினதும் குடும்பங்கள் ஆகியன தமது அன்புக்குரியவர்களின் கடுந்துயரமான இழப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன. தமது அன்புக்குரியவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது இறந்துவிட்டார்களாக என்பதற்கான பதில்களுக்காக ஆண்டுக்கணக்காகவும், தசாப்தங்களாகவும் இக் குடும்பங்களின் பெரும்பாலானவை காத்திருக்கின்றன. இந்த நீண்டகாலக் காத்திருப்பு அவர்களது துன்பத்தையும், விரக்தியையும், மனவெடுக்களையும் ஆழமாக்கியுள்ளது. நிலையான சமாதானத்திற்கும், இணை-வாழ்வுக்குமான பங்கிடப்பட்ட தொலைநோக்கு குறித்து நாம் நம்பிக்கை கொண்டிருப்பதனால், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டத்தின் நோக்கங்களைச் சாதிப்பதற்கு எமக்குப் பலத்தையும், ஆதரவையும் வழங்குமாறு இலங்கையின் மக்களுக்கு நாம் அழைப்புவிடுக்கின்றோம்.

**சாலிய பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி**
**தவிசாளர்,**
**காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**